24th January 1961]

Mr. SPEAKER : அடிபட்டார் என்றுதான் சொன்னார். அப்படித்தான் எனக்குக் கேட்டது. அடித்தார் என்று சொன்னால்தான் தப்பு.

Forests

* 152 *Q*.—**Sri A. VEDARATHNAM :** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராமங்களிலே காட்டுப் பண்ணைகள் ஏற்படுத்தும் புதிய திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

(இ) அதன் விவரமென்ன ?

(உ) மத்திய அரசாங்கம் இதற்கு என்ன உதவி செய்கிறது ?

(எ) இதுவரை எங்கெங்கே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது ? இன்னும் எங்கெங்கே ஆரம்பிக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது ?

(ஐ) இதற்கான அரசாங்க உதவி விவரமும் கிராமத்தார் பங்கும் என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*), (*d*) & (*e*) The Scheme, which aims at the development of village forests by planting trees of fuel, manure and fodder value, has been ordered to be undertaken on a pilot scale by the Forest Department over 2,074 acres in selected Development Blocks in the Chingleput, South Arcot and North Arcot districts during 1960–61 at an estimated cost of Rs. 2·05 lakhs. During the Third Five-Year Plan period, it is proposed to undertake the scheme on a large scale in all unutilised areas in the villages such as Village commons belonging to the Panchayats in all Development Blocks to the extent to which funds are made available for implementing the scheme in the Third Five-Year Plan, when it is finalised. During this period, the scheme will be undertaken by the Panchayats themselves with the assistance of the Forest Department. Other details in this regard have not yet been finalised.

(*c*) For the year 1960–61, a 100 per cent subsidy for this scheme has been claimed from the Government of India.

Sri A. VEDARATHNAM : இந்தப் பண்ணைகள் இதற்கு முன் எங்கெங்கே செயல்பட்டு வருகிறது ? இப்போது எந்தெந்த இடத்தில் இதைப் பரீட்சார்த்தமாக துவக்க யோசனை செய்யப் பட்டிருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதற்கு முன்பு இம் மாதிரிப் பண்ணைகள் நடைபெறவில்லை. ஆனால் இப்போது பரீட்சார்த்தமாக செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு முதலிய மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன. திருக்கழுக் குன்றம் வட்டார வளர்ச்சிப் பகுதியிலே இப்போது நடைபெற்றுக்

[24th January 1961

கொண்டிருக்கிறது. இதுபோல் இன்னும் பல வட்டார வளர்ச்சிப் பகுதியிலே தொடங்கப்பட இருக்கிறது. இதைப்பற்றிய விவரங் கள் முன்பே கொடுத்திருக்கிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : After the scheme has been finalised, will the Government consider the desirability of placing a copy of the scheme on the table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir. This will take a year and this can be considered when we discuss the Budget for the next year.

SRI P. G. MANICKAM : ஸார், 3-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே கோயம்புத்தூர் ஜில்லாவிலே, தாளவாடி மலைப் பிரதேசத்திலே இவ்வாறு காட்டுப் பண்ணை தொடங்குவதற்கு அரசாங்கத்தில் ஏதாவது பரிசிலனை நடத்தப்பட்டு வருகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பது பரீட்சார்த்த திட்டம்தான். 3-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே பல இடங்களில், பல வட்டார வளர்ச்சித் திட்டங்களிலே இத்திட்டத்தை எடுத்துக்கொள்ளப் படும். அப்போது வசதியாக இருக்குமானால், அதுபற்றி அப்போது கவனிக்கப்படும்.

Home Minister's tour

*** 153 Q.—SRI A. VEDARATHNAM :** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ரஷ்ய நாட்டிற்கு கனம் அமைச்சரவர்கள் விவசாய ஆராய்ச்சிப் பிரயாணம் செய்துவந்ததின் மூலம் இந்த நாட்டு விவசாயத்துறையில் என்னென்ன அபிவிருத்தி செய்யப்படும்?

(இ) அவற்றை அமுலுக்குக் கொண்டுவர ஏதேனும் திட்ட மிடப்பட்டிருந்தால் அதன் விவரமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) & (ஆ) The Minister has been very much impressed with the Scientific Research and its application to the land in the Soviet Union, and Government will devote larger attention to Scientific Research and extension work in the matter of agricultural development.

SRI A. VEDARATHNAM : அமைச்சர் அவர்கள் ரஷ்ய நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின் போது, இந்த நாட்டிற்குப் பொருத்தமான விவசாய முறை ஏதாவது அங்கே அனுஷ்டிக்கப் பட்டது அவர்களுக்குப் புலப்பட்டதா? அப்படியிருந்தால், அதை இங்கே அனுஷ்டிப்பதற்கு ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் என் விடையிலேயே அங்கு விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அந்த ஆராய்ச்சிகள் மேலும் நிலத்திற்கு விஸ்தரிக்கப்படுகின்றன என்று குறிப்பிட்டேன். ஆகவே அதை இன்னும் தீவிரமாக நடத்த வேண்டுமென்பது இப்போது எனக்குப் புலப்படுகிறது.